Circular: GR/12/2013

# ஆயர் கடிதம்

‘ஹோம் மிஷன்’

ஈசோ மெசியாவின் அன்புக்குரிய இறைமக்களே,

இவ்விசுவாச ஆண்டில் ஏராளமான காரியங்களை நமது மறைமாவட்ட அளவிலும் பங்களவிலும் முன்னெடுத்து நடத்திக் கொண்டிருக்கிறோம். இதற்காக உழைப்பை அளித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் என மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தன்னலமற்ற இறைப்பணி செய்கின்ற உங்களை இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க நான் வேண்டுகிறேன்.

இவ்விசுவாச ஆண்டில் நாம் முன்னெடுக்க தீர்மானித்து நடத்த இருக்கின்ற இன்னொரு முக்கியமான காரியத்தைக் குறித்து நான் அறிவுறுத்த விரும்புகிறேன். ‘ஹோம் மிஷன்’ என்று இது அறியப்படுகிறது. இதை கன்னியர்களின் தலைமையில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மடல் வழியாக, ‘ஹோம் மிஷன்’ ஐ குறித்தும் அதன் முக்கியத்துவத்தைக் குறித்தும் நான் எழுத விரும்புகிறேன்.

அருட்சகோதரிகள் பல மாதங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு, செபம் செய்து, இறைவனின் பிரசன்னத்தில் நிலைத்திருந்து, இப்பணியை மேற்கொள்கின்ற நாட்களில் உபவாசம் இருந்து அனைத்து இறைமக்களின் வீடுகளையும் சந்திக்கின்ற இறைப்பணியே ‘ஹோம் மிஷன்’. நமது மறைமாவட்டத்தில் 6 அருட்சகோதரிகள் தயாரிப்பில் ஈடுபட்டு இப்போது அப்பணியை மேற்கொள்ள தாயாராக இருக்கிறார்கள். இவ்விறைப்பணி பயன்மிக்கதாகும் பொருட்டு பங்குகளில் இதை நடத்துவதற்கும் ஒரு மாத காலம் முன்னதாகவே, அறிவிப்பை கொடுத்து அதற்கு தயாரிப்பாக செபங்களை குடும்பங்களிலும் கோயில்களிலும் நடத்த வேண்டும். பங்குதளத்தில் செயல்பட்டு வரும் உறவியங்களின் தலைவர்கள், பக்தசங்கங்களின் தலைவர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவரும் பங்குதந்தையின் தலைமையில் கூடி, ‘ஹோம் மிஷன்’ நடத்துவதற்கான தயாரிப்புகளை முன்னரே தீர்க்கமாக சிந்தித்து செயல்படுத்துவதற்கு தேவையான அனைத்தையும் செய்திருக்க வேண்டும். அக்கூட்டத்தில் ‘ஹோம் மிஷன்’ நடத்துகின்ற குழுவின் அங்கத்தினர் வந்து, ‘ஹோம் மிஷன்’ இன் முக்கியத்துவத்தைக் குறித்து விரிவாக பேசி, அது நமது பங்கிற்கும் மறைத்தொண்டு தளத்திற்கும் எந்த அளவு அவசியமானது என்பதைக் குறித்து பங்குசமூகத் தலைவர்களுக்கு எடுத்துரைப்பார்கள். மறைமாவட்ட அளவில் ‘ஹோம் மிஷன்’ நடத்துவதற்காக பொறுப்பு நமது குருகுலமுதல்வரான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் ‘ஹோம் மிஷன்’ தொடங்குவதற்கு முந்தைய ஞாயிறு, பங்கை சந்தித்து திருப்பலி ஒப்புக்கொடுத்து பங்கு மக்களிடம் இவ்விறைப்பணியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி, முறையான புரிதலையும் ஏற்படுத்துவார்.

பலவகையான துயரங்கள், நோய்கள், குடும்ப சிக்கல்கள், உறவுகளிலே விரிசல்கள், விசுவாசக்குறைவு, மன உளைச்சல்கள், கோயில்மீது ஆர்வக்குறைவு, விரோதங்கள், மன்னிக்க முடியாத மனநிலைகள், நிரந்தரமாகிப்போன தோல்விகள், பிள்ளைகளின் தவறான நடவடிக்கைகள் போன்றவை நமது குடும்பங்களை பாதிப்புக்கு உட்படுத்தியிருககிறது என்பதே உண்மை. யாராவது ஒருவர் வந்திருந்தால் முழுமையாக அவரிடம் சொல்லியிருக்கலாம் என மனப்புழுக்கத்தில் இருப்போர்கள் நம்மிடையே உண்டு.

எனது வேதனைகளைக் கேட்க யாரும் இல்லை என்று ஆதங்கப்பட்டு வாழ்வோர் நம்மிடையே உண்டு. ஒருவரை ஒருவர் ஊக்கமூட்டவும், ஆறுதல்படுத்தவும் இன்று குடும்பங்களில் ஆட்கள் இல்லை என்ற நிலையாகிவிட்டது. குடும்பங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், அதற்கான வாய்ப்புகளும் ஆட்களும் இல்லாமல் போகிறது. இவற்றை எல்லாம் மனதில் கொண்டே நமது குடும்பங்களைத் தேடி அருட்சகோதரிகள் வருகிறார்கள்.

உங்கள் வீடுகளை அவர்கள் சந்திக்கும் போது, கால அளவு அவர்களை கட்டுப்படுத்தாது. உங்களுக்கு எவ்வளவு நேரம் தேவையாக இருக்கிறதோ அவ்வளவு நேரம் அவர்கள் செலவிட்டு உங்களுடைய பிரச்சனைகளைக் குறித்துக் கேட்பதற்கும், நோய்களில் சிக்குண்டவர்களுக்காக செபிக்கவும் ஆறுதல் படுத்தவும், தீரா பாதையாக பாதித்திருக்கின்ற தீய பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை பெறுவதற்குமான இறையருளை உங்களுக்காக செபிப்பதோடு, விட்டு விலகுவதற்கு தேவையான காரியங்களை செய்து தருவதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் குடும்பங்களை கடவுளின் இல்லங்களாக மாற்றுவதற்கு தேவையான அனைத்தையும் செய்வதற்கே இவ்வருட்சகோதரிகள் வருகிறார்கள். ஏராளமான இறை அபிஷேகம் பெற்றவர்களாக அவர்கள் உங்களுடைய வீடுகளை சந்திக்க வருகிறார்கள். அவர்கள் உங்களோடு பேசுகின்ற அனைத்தும் இறைவனின் குரலாக ஏற்று செவசாய்க்க வேண்டும். தூரமாக உள்ள குடும்பங்களைக் கூட அவர்கள் விட்டு வைக்காமல் தேடி வருவதற்கு ஒரே ஒரு நோக்கம் தான் உண்டு, அது உங்கள் குடும்பங்கள் புனிதப்படுத்தப்பட வேண்டும்.

அருட்சகோதரிகள் உங்கள் வீடுகளைத் தேடி வரும் போது, கண்டிப்பாக எல்லா உறுப்பினர்களும் இருக்க வேண்டும். தேர்வு அந்நாட்களில் இருப்பின் அப்பிள்ளைகள் ஹோம் மிஷன் நடக்கின்ற வேளையில் இல்லாமல் இருக்கலாம். மற்றபடி பிள்ளைகள் முன்னதாகவே அன்றைய தினம் லீவ் எடுத்து குடும்பத்தில் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வீட்டை நன்றாக தூய்மைப்படுத்தி, திருஇருதய ஆண்டவரின் படத்தை அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் நிறுவி, எல்லாவிதமான தயாரிப்புகளையும் நடத்த வேண்டும். திருச்சபை அனுமதிக்காத விவிலியமோ, இதர வெளியீடுகளோ வீடுகளில் உண்டு என்றால் அவற்றை எல்லாம் புறந்தள்ள உறுப்பினர்கள் தயாராக வேண்டும். நீங்கள் எந்த அளவுக்கு திறந்த மனநிலையோடு பேசுகிறீர்களோ அந்த அளவுக்கு இறைவனின் ஆசீர்வாதங்கள் உங்கள் குடும்பங்களுக்குக் கிடைக்கும். ஒரு பங்கில் ஹோம் மிஷன் நடக்கும் வேளையில் நானும், குருக்கள் அனைவரும் அருட்சகோதரிகளும் இறைமக்கள் சமூகம் முழுவதும் அந்த பங்கிற்காக செபித்துக்கொண்டிருக்கும் என்பதையும் நான் உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

நமது விசுவாசத்தை விட்டு விலகிச் சென்ற குடும்பங்கள் உண்டு என்றால் அவற்றைத் திரும்ப கொண்டு வர, அருட்சகோதரிகளோடு இணைந்து அதற்கான முழு ஒத்துழைப்பை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். ''இந்த ஆண்டும் இதை விட்டு வையும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன்'' என்றுரைத்த நமது ஆண்டவரின் வார்த்தைகளை நமது மனங்களில் ஏற்போம். நமது வாழ்வில் நமது உள்ள நிலங்களை உழுகின்ற, கொத்தி எருபோடுகின்ற அற்புதமானது இவ்விறைப்பணியின் வேளையில் நடக்க இருக்கிறது. இது நடத்துவது வெட்டி எறிவதற்கு அல்ல, மாறாக வளப்படுத்தவும் ஏராளமான கனிகளைக் கொடுப்பதற்கான பண்படுத்துதலுமே. நாம் மரங்களின் சுற்றுப்புறத்தை கொத்தும்போது, சிறுசிறு வேர்கள் துண்டிக்கப்படுவதை நாம் அறிவோம். நமது வாழ்வில் வேரூன்றிப்போன தீமைகளின் வேர்களை நாம் அகற்றுவதற்கு இந்த ஹோம் மிஷன் நமக்கு பெரும் உதவியாக

இருக்கும். வேர்கள் வெட்டுவதற்காக நாம் அனுமதிப்போம். அது முதலில் நமக்கு சிறு வேதனையை தரும் என்றாலும் அதை நாம் மனதார ஏற்கும் போது அது மாற்றத்திற்கு வழிகோலும். சிறுவேர்கள் மாறும் போது புது வேர்கள் உருவாகி, புதுகிளைகள் பரப்புவதற்கும் தேவையான சத்தும் இறையாசீரும் நமக்கு கிடைக்கும். இதை மனதில் கொள்வோம்.

நமக்கு முன்னர் வாழ்ந்திருந்த தலைமுறையின் மக்களை விட பொருளாதாரத்திலும், கல்வியிலும் நாம் முன்னேறி ஏராளமான இறையாசீருக்கு நாம் உரியவர்களாக மாறி இருக்கிறோம் என்பதை இதயம் நிறைந்த நன்றியோடு நினைப்போம். நமக்கிருக்கின்ற செல்வங்கள் எல்லால் வெளிப்படையாக நாம் மரத்தில் காணும் இலைகளும் பழங்களுமே. ஆனால், அவை நிலையாக நிற்க வேண்டுமென்றால் ஆழமாக ஊன்றப்பட்ட வேர்கள் அம்மரத்திற்கு தேவை. இல்லையென்றால் மேலோட்டமாக காண்கின்ற அனைத்தும் விழுந்து போகும். நமது வாழ்வில் ஆழமாக ஊன்றி நிற்க வேண்டிய வேர் எதுவென்றால் விசுவாசம். அவ்விசுவாசம் இல்லையென்றால் வெளிப்படையாக தெரிகின்ற அனைத்தும் இல்லாமல் போகும். விசுவாசத்தில் ஆழமாவதற்கான வாய்ப்பாக ஹோம் மிஷன் மாறும் என்பதில் ஐயமில்லை. பங்குதந்தையர்கள் தருகின்ற அறிவுரைகளை பங்குமக்கள் ஏற்று, செபம், நோன்பு, உபவாசம், விசுவாசத்தை ஆழப்படுத்தும் பவனிகள், பரிகார செயல்கள், விழிப்பு செபங்கள் அனைத்திலும் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நல்ல சமாரியனைப் போன்று நமது அருகாமையில் வந்தமர்ந்து, நமது உடல் உள்ள காயங்ளில் மருந்து வைத்து கட்டு போட்டு, வாழ்வில் இழந்து போன பார்வைகளை சீர் செய்து, நம்மை முன்னோக்கி நகர்த்துவதற்காக ஆண்டவர் ஆசீர்வதித்து அனுப்புகின்ற தூதர்களாக நாம் நம் வீடுகளை தேடி வரும் அருட்சகோதரிகளைப் பார்ப்போம். நல்ல சமாரியரான இயேசு நம்மை தொடவும், குணப்படுத்தவும், வாழ்வில் இலட்சியங்களை செதுக்கித் தரவும் நாம் நம்மை விட்டுக்கொடுப்போம்.

உங்கள் வீடுகளை தேடி வரும் அருட்சகோதரிகளிடம் உங்களுடைய ஆதங்கங்களையும் வேதனைகளும், நோய்களையும், பிரச்சனைகளையும் வெளிப்படுத்த தயங்க வேண்டாம். நமது துயரங்களை நாம் பகிர்ந்து கொள்ளும் போது அவற்றை இறைவன் எளிதாக்குவார். மனம் திறந்து பேசவும், பகைமை உணர்வுகள் உண்டெனில் அவற்றை விட்டுவிடவும், தீமைகள் வாழ்வை பீடித்திருக்கிறது என்றால் அவற்றிலிருந்து விலகவும், நேரிய வாழ்வை வாழவும் நாம் இதன் வழியாக இறைவனின் கரங்களில் சமர்ப்பிப்போம்.

நமது பங்கில் நடக்கின்ற ஹோம் மிஷனின் மிக முக்கயமான காரியங்கள் கீழ்வருவன

1. ஹோம் மிஷன் நடத்துகின்ற அருட்சகோதரிகளின் செய்கின்ற செபம், உபவாசம், பரிகாரச் செயல்கள், தியானம், பரிந்துரை வேண்டுதல்கள், பாவசங்கீர்தனம்.
2. பங்குதளத்தில் ஹோம் மிஷன் உறுப்பினர்கள் பங்குதந்தையோடும் பங்கு பொறுப்பாளர்களோடும் சேர்ந்து செய்கின்ற செபம், முன்தயாரிப்புகள்.
3. அருட்சகோதரிகளின் வீடுசந்திப்பு, செபங்கள், இறைவார்த்தையை விளக்குதல், கௌன்சிலிங்... போன்றவை.
4. ஹோம் மிஷனின் இறுதியில் பங்குமக்கள் அனைவரும் சேர்ந்து நடத்துகின்ற பரிகார பவனியும், கன்வென்ஷனும்.
5. ஒவ்வொரு நாளும் தாங்கள் சந்தித்த குடும்பங்களை ஒன்றிணைத்து, ஹோம் மிஷன் உறுப்பினர்களின் தலைமையில் நடக்கின்ற கன்வென்ஷன்.
6. தேவை ஏற்படும் குடும்பங்களில் நடத்துகின்ற கௌன்சிலிங்.

7. ஒவ்வொரு நாளும் தாங்கள் சந்தித்த குடும்பங்களைக் குறித்து பங்குதந்தையோடு இணைந்து நடத்துகின்ற பகிர்தலும், செபமும்.
8. ஹோம் மிஷனின் இறுதியில், பங்களவில் நடத்துகின்ற பரிகார பவனி, திவ்ய நற்கருணை ஆராதனை, குணப்படுத்தலின் ஆராதனை, பாவசங்கீர்த்தனம்.

அனைவரும் பாவசங்கீர்த்தனம் செய்ய தேவையானவை செய்யப்பட வேண்டும் (இறுதி கன்வென்ஷன் நடக்கும் போது, ஆயரோ, குருகுல முதல்வரோ, அப்பங்கை சந்தித்து ஆசீர்வாதம் கொடுப்பது உகந்தது).

ஒவ்வொரு குடும்பத்தினுடையவும் ஆன்மீக மற்றும், பொருளாதார சிக்கல்களைக் குறித்து தெளிவாக தெரிந்து கொள்கின்ற தளமாக ஹோம் மிஷன் மாறுகிறது. அதனால் தனிப்பட்ட கவனிப்பு வேண்டியிருக்கும் குடும்பங்களுக்குத் தேவையானவற்றை செய்து கொடுக்க இவ்விறைப்பணி வழியாக சாத்தியமாகிறது. பங்குதளத்தில் உள்ள தம்பதியர், இளைஞர்கள், பிள்ளைகள் ஆகியோருக்கு கருத்துரை வகுப்புகள், கௌன்சிலிங் போன்றவை ஹோம் மிஷன் வேளையில் நடத்தப்படுவதால், பங்கின் ஒட்டுமொத்த ஒத்துழைப்பும் பங்கேற்பும் மிக மிக அவசியமானது. நான் உங்களுடைய முழு ஒத்துழைப்பை வேண்டுகிறேன்.

நமது பிரதேசத்தில் விசுவாசத்தை கொடுக்கவும், இறைச்சமூகங்களை உருவாக்கவும் தியாகம் செய்து வேலை செய்த அனைத்து தந்தையர்களையும் துறவியரையும் பொதுநிலையினரையும் நாம் நன்றியோடு நினைவில் கொள்வோம். மேலும், இம்மாதம் 15 (செப்டம்பர் 15, 2013) ஆம் தேதி தொடங்க இருக்கின்ற ஹோம் மிஷன் வெற்றியடைய நீங்கள் அனைவரும் செபிக்க வேண்டும் என அன்போடு நான் வேண்டுகிறேன். விசுவாசத்தில் நமக்கு தந்தையான மார்த்தோமாவின் திருத்தொண்டு ஆர்வமும் திட விசுவாசமும், தியாக மனநிலையும் ஹோம் மிஷன் மேகொள்ள இருக்கின்ற அருட்சகோதரிகளுக்கு ஆர்வத்தையும் உத்வேகத்தையும் கொடுக்கட்டும் என்று நான் வேண்டுகிறேன்.

இப்படிக்கு

தக்கலை
03.09.2013

மார் ஜார்ஜ் இராஜேந்திரன்
ஆயர், தக்கலை மறைமாவட்டம்.

இச்சுற்றுமடலை 2013, செப்டம்பர் 8 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கிடையே வாசிக்கவும் (முதல் கட்டமாக, படந்தாலுமூடு மறைவட்ட ஆலயங்களில் மட்டும்)